## மெட்ராஸ் உயர் நீதிமன்றம்

**அறிவிக்கை எண்.3/2024** **நாள்: 15/01/2024**

| | |
|---|---|
| **அறிவிக்கை நாள்** | **15/01/2024** |
| **இணையதளம் வாயிலாக பதிவு செய்ய மற்றும் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்** | **13/02/2024** |
| **செலான் வழியாக இந்தியன் வங்கியில் கட்டணம் செலுத்துவதற்கான கடைசி நாள்** | **15/02/2024** |

மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் "ஓட்டுநர்" பணிக்கு நேரடி தேர்வின் மூலம் தெரிவு செய்வதற்கு இணையதளம் வாயிலாக மட்டும் (https://www.mhc.tn.gov.in) தகுதி வாய்ந்த விண்ணப்பத்தாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**குறிப்பு**

அ) https://www.mhc.tn.gov.in என்ற இணையதளம் முகவரியில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். ஏனைய முறைகளான அஞ்சல், கூரியர், பதிவுஅஞ்சல், மின்னஞ்சல் மற்றும் நேரடியாக சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் எந்தவொரு காரணத்திற்காகவும், எச்சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இது தொடர்பான கடிதப் போக்குவரத்து எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

ஆ) விண்ணப்பதாரர்கள் இணையதள விண்ணப்பத்தினை பூர்த்தி செய்வதற்கு முன்பாக, https://www.mhc.tn.gov.in என்ற இணையதள முகவரியில் கொடுக்கப்பட்டுள்ள இந்த பதவிக்கான 'அறிவிக்கை' மற்றும் விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தலை பார்வையிட்டு, அதில் குறிப்பிட்டுள்ளபடி அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளார்கள் என்றும் அவர்களுக்கு தகுதிக்குறைவு இல்லை என்றும் உறுதியாக அறிந்த பின்னர், கவனமுடன் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்ய வேண்டும்.

இ) விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலமாக விண்ணப்பிக்க கணினி அல்லது மடிக்கணினியினை பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அலைபேசி (Cellular Phone) அல்லது வரைபட்டிகை (Tab) யின் மூலம் விண்ணப்பிக்க வேண்டாம். ஏனெனில் விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்வதற்கு கணினி மற்றும் மடிக்கணினி மட்டுமே ஏதுவாக இருக்கும்.

ஈ) பதிவு செய்வது மட்டுமே, ஒரு பதவிக்கான விண்ணப்பமாக கருதப்படமாட்டாது. விண்ணப்பத்தில், தவறான மற்றும் முழுமையற்ற தகவல்களை கொடுப்பது அல்லது தேவையான விவரங்களை கொடுக்காமலிருப்பது போன்றவற்றால் ஏற்படும் விளைவுகளுக்கு, மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் ஆட்சேர்ப்பு பிரிவு எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

உ) தேர்வு செய்யும் நடைமுறையின்போது, விண்ணப்பதாரர் தகுதியற்றவர் என கண்டறியப்பட்டால், அவர் எந்த கட்டத்திலும் தகுதி நீக்கம் செய்யப்படுவார்.

ஊ) அறிவிக்கை மற்றும் விண்ணப்பதாரர்களுக்கான பொதுவான வழிமுறைகள் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றினுள் ஏதேனும் முரண்பாடு இருப்பின், ஆங்கில மொழி அறிவிக்கையே இறுதியானது.

**கவனத்திற்கு**

- மெட்ராஸ் உயர்நீதிமன்ற நீதித்துறை ஆட்சேர்ப்பு பிரிவின் அனைத்து ஆட்சேர்ப்புகளும், தகுதியின் அடிப்படையிலேயே நடத்தப்படுகிறது.
- நேர்மையற்ற முறையில் வேலை வாங்கித்தருவதாக உறுதி அளித்து ஏமாற்றும் மோசடியாளர்கள் மற்றும் தரகர்களிடமிருந்து விண்ணப்பதாரர்கள் தங்களை காத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- அவ்வாறான நேர்மையற்ற நபர்களால் விண்ணப்பதாரர்கள் பாதிக்கப்பட்டு அதனால் அவர்களுக்கு உண்டாகும் கஷ்ட நஷ்டங்களுக்கு மெட்ராஸ் உயர்நீதிமன்ற ஆட்சேர்ப்பு பிரிவு எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.
- விண்ணப்பத்தாரர் அவ்வாறான நியாயமற்ற முறையில் வேலை பெறுவதற்கு நேரடியாகவோ அல்லது வேறு நபர் வாயிலாகவோ, ஆட்சேர்ப்பு பிரிவை அணுகினால் அவர் வேலை பெறும் தகுதியை இழந்துவிடுவார்.
- இணையதளம் மூலம் சமர்ப்பிக்கப்படும் அனைத்து விவரங்களுக்கும் விண்ணப்பதாரரே பொறுப்பாவார். இணையதள விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது தவறான தகவல் தரப்பட்டிருந்தால், அதற்கு இணையதள சேவையகம்/ பொது சேவை மையங்கள் உள்ளிட்ட சேவை வழங்குவோரை குறை கூற இயலாது. ஒருமுறை சமர்ப்பித்த, இணையதள விண்ணப்பத்தினை மீண்டும் திருத்த முடியாது, ஆகையால், **விண்ணப்பதாரர்கள் இறுதியாக விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன்பு, தாங்கள் பூர்த்தி செய்த விண்ணப்பத்தை கவனமுடன் சரிபார்த்து அதன்பின் சமர்ப்பிக்கவும்.**

## 2. காலி பணியிடங்கள் மற்றும் சம்பள விகிதம்

| வ.எண். | பதவியின் பெயர் | காலிப் பணி இடங்களின் எண்ணிக்கை | சம்பள ஏற்றமுறை |
|---|---|---|---|
| 1. | ஓட்டுநர் (Driver) | 13 | ரூ.19,500-71,900/- + சிறப்பு ஊதியம் |

## 3. காலி பணியிடங்களின் பகிர்வு

| Sl. No. | Category | Backlog Vacancies | Vacancies | Total Vacancies |
|---|---|---|---|---|
| 1 | GT | 0 | 1 | 1 |
| 2 | GT(W)(PSTM) | 0 | 1 | 1 |
| 3 | GT (BLINDNESS AND LOW VISION) | 1 | 0 | 1 |
| 4 | GT(PSTM) (PRIORITY) | 0 | 1 | 1 |
| 5 | BC (OTHER THAN BCM) | 0 | 1 | 1 |
| 6 | BC (OTHER THAN BCM) (EX-SER) | 0 | 1 | 1 |
| 7 | BC(M) (W) (DW) | 0 | 1 | 1 |
| 8 | MBC/DC | 0 | 1 | 1 |
| 9 | MBC/DC (W) | 0 | 1 | 1 |
| 10 | MBC/DC (LOCOMOTOR DISABILITY INCLUDING CEREBRAL PALSY, LEPROSY CURED, DWARFISM, ACID ATTACK VICTIMS AND MUSCULAR DYSTROPHY) | 0 | 1 | 1 |
| 11 | SC | 0 | 1 | 1 |
| 12 | SC (PRIORITY) | 0 | 1 | 1 |
| 13 | SC (A) (PSTM) | 0 | 1 | 1 |
| | **TOTAL** | **1** | **12** | **13** |

<u>குறிப்பு:-</u> விளம்பரப்படுத்தப்படும் பதவிகளுக்கான காலி பணியிட எண்ணிக்கையானது தோராயமானது. தெரிவுப்பட்டியல் இறுதிசெய்யப்படுவதற்குமுன் எந்த நேரத்திலும் காலி பணியிட எண்ணிக்கை குறைக்கப்படவோ, கூட்டப்படவோ கூடும்.

**(4) தகுதிகள்**

**(A) வயது வரம்பு (01.07.2024 அன்று உள்ளவாறு)**

| வ. எண். | வகையினம் | நிறைவடைய வேண்டிய குறைந்தபட்ச வயது | உட்பட்டிருக்க வேண்டிய அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| 1. | **ஒதுக்கீடு வகையினர்கள்** (ஆதிதிராவிட வகுப்பினர்/ஆதிதிராவிட அருந்ததியர்/பழங்குடி வகுப்பினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் & சீர் மரபினர்/ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர்) மற்றும் எல்லா வகுப்பை சார்ந்த ஆதரவற்ற விதவைகள்) | 18 வயது | 37* வயது |
| 2. | **மற்றவர்கள்/ ஒதுக்கீடு வகையை சார்ந்தவர் அல்லாதவர்கள்** (கீழ்க்கண்ட வகுப்பை சாராதவராக இருத்தல் வேண்டும். ஆதிதிராவிட வகுப்பினர்/ஆதிதிராவிட அருந்ததியர்/பழங்குடி வகுப்பினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் & சீர் மரபினர்/ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர்), [மற்ற மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களை சேர்ந்தவர்கள் (அதாவது தமிழ்நாட்டினைத்/ புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைத் தவிர), அவர்களுடைய மாநிலங்களில் அல்லது யூனியன் பிரதேசங்களில் இட ஒதுக்கீடு கோர தகுதியான வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் 'மற்றவர்கள்' (Unreserved Category - UR) என்றே கருதப்படுவர்]. | 18 வயது | 32* வயது |
| 3. | **பணியிலுள்ள விண்ணப்பதாரர்களுக்காக** 'பணியிலுள்ள விண்ணப்பதாரர்கள்' என்றால் -மெட்ராஸ் உயர்நீதி மன்ற பணி அல்லது தமிழ்நாடு நீதித்துறை அமைச்சு பணியில் முழுநேர பணியாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தகுதி பெற்றவர்/தகுதி பெறாதவர் தொடர்ந்து பணியிலுள்ள நபர் ஆவர். | 18 வயது | 47* வயது |

<u>குறிப்பு</u> - மற்றவர்கள் (அதாவது ஆதிதிராவிடர் வகுப்பினர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்கள்) தவிர) எவரேனும் மத்திய/மாநில அரசுத்துறைகளில் 5 வருட பணி முடித்திருந்தால் அவர்கள் வயது வரம்பிற்குள் இருந்தாலும் அவர்கள் தகுதியற்றவர்கள் ஆவர்.

***நேரடி ஆட்சேர்ப்புக்கு, 13.09.2021 தேதியிட்ட அரசாணை (நிலை) எண்.91, மனிதவள மேம்பாட்டுத் துறை(S) ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி, அதிகபட்ச வயது வரம்பு இரண்டு ஆண்டுகளுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.**

**<u>விளக்கம்</u>**

(i) விண்ணப்பதாரர்கள் 01.07.2006-ஆம் தேதிக்கு பின்னர் பிறந்தவராக இருத்தல் கூடாது மற்றும் கீழே கொடுக்கப்பட்டுள்ள தேதிகளுக்கு முன்பும் பிறந்திருக்கக்கூடாது.

அ) 02.07.1987 (ஒதுக்கீட்டுப் பிரிவின் கீழ்வரும் **ஆதிதிராவிட வகுப்பினர்/ ஆதிதிராவிட அருந்ததியர்/பழங்குடியின வகுப்பினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் & சீர் மரபினர்/பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர்).**

ஆ) 02.07.1992 (ஒதுக்கீட்டுப் பிரிவின் கீழ் சாராத விண்ணப்பதாரர்கள் மற்றும் **பிற மாநில விண்ணப்பதாரர்கள் / யூனியன் பிரதேசங்கள்).**

இ) 02.07.1977 (பணியிலுள்ள விண்ணப்பதாரர்கள்).

(ii) **<u>இருப்பினும், கீழ்கண்ட வகை விண்ணப்பதாரர்களுக்கு மேற்குறிப்பிட்ட அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.</u>**

**a. <u>மாற்றுத்திறனாளிகள்</u>**

தகுதிவாய்ந்த மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்கள் (மாற்றுத்திறனாளிகளின் உடல் குறைபாட்டின் அளவு 40% அல்லது அதற்கு மேலாக இருத்தல் வேண்டும்) நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பை விட பத்து வருடங்கள் வயது தளர்வை பெற உரிமையுடையவர்கள் ஆவார்கள். அவ்வாறான விண்ணப்பதாரர்கள் 27.07.2018ந் தேதியிட்ட அரசு ஆணை நிலை எண்.28 மாற்றுத்திறனாளிகள் நலன் (டிஏப்பி 3.1) துறையின் ஆணையில் குறிப்பிட்ட படியும் மற்றும் இந்திய அரசு மாற்றுத்திறனாளிகளின் உரிமை விதிகள், 2017ல் இந்திய அரசு நிர்ணயித்துள்ள விதிகளின்படி பெறப்பட்ட சான்றிதழினை சமர்பிக்க வேண்டும். மேற்கூறிய தேர்வுக்கு எந்த பதலி எழுத்தர் உதவியும் அனுமதிக்கப்படாது.

b. <u>அரசுப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மற்றும் தற்காலிக அரசுப் பணியாளர்கள்</u>

01.07.2024 அன்று 42 வயது நிறைவடையாத, அரசுப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மற்றும் தற்காலிக அரசுப் பணியாளர்கள், அறிவிப்பு தேதி வரை தொடர்ச்சியாகவோ அல்லது தொடர்ச்சியாக அல்லாமலோ அரசுப் பணியில் இருந்த காலத்தை அவர்களுடைய வயதிலிருந்து கழித்துக் கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

**<u>விளக்கம்</u>** - ஒரு விடுவிக்கப்பட்ட மாநில அரசுப் பணியாளர் என்பவர் மாநில அரசுப் பணியில் இருந்து பணியிடங்கள் குறைப்பு அல்லது ஒழுங்கு முறை நடவடிக்கை அல்லாத வேறேதும் காரணத்திற்காக விடுவிக்கப்பட்டவர் ஆவார். **(பிரிவு 61 தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனை) சட்டம், 2016)**

c. <u>முன்னாள் இராணுவத்தினர் :</u>

**(அ)** 01.07.2024 அன்று, ஆதிதிராவிட வகுப்பினர், ஆதிதிராவிட (அருந்ததியர்) வகுப்பினர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினைச் சார்ந்த முன்னாள் இராணுவத்தினருக்கு அதிகபட்ச வயதை நிறைவு செய்யாதிருக்க வேண்டும். வயது வரம்பு 55** ஆகும்.

**(ஆ)** 01.07.2024 அன்று, மற்ற முன்னாள் இராணுவத்தினர் அதாவது மேற்குறிப்பிடப்பட்டுள்ள வகுப்புகளை சாராத முன்னாள் இராணுவத்தினர்களின் அதிகபட்ச வயது வரம்பு 50** ஆகும். (பிரிவு 63 தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனை) சட்டம், 2016)

(iii) தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை சேர்ந்த ஆதிதிராவிட வகுப்பினர் அல்லது ஆதிதிராவிட வகுப்பினர் (அருந்ததியர்கள்) அல்லது பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்கள்) ஆகியவற்றில் ஏதேனும் ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அந்தந்த வகுப்பினர்களாக கருதப்படுவார்கள். மற்ற மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்களை சேர்ந்தவர்கள் (அதாவது தமிழ்நாடு/ புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைத் தவிர), அவர்களுடைய மாநிலங்களில் அல்லது யூனியன் பிரதேசங்களில் இட ஒதுக்கீடு கோர தகுதியான வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் 'மற்றவர்கள்' (Unreserved Category - UR) என்றே கருதப்படுவர். எனவே அவர்கள் எந்த ஒரு சூழ்நிலையிலும்

வயது வரம்பில் தளர்வு அல்லது நியமனத்தில் முன்னுரிமை அல்லது கட்டணத்தில் தளர்வு என எச்சலுகைகளையும் கோர இயலாது. அவர்கள் விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்யும்போது 'மற்றவர்கள்' (Unreserved Category - UR) என்று தேர்வு செய்து தேவையான கட்டணத்தை செலுத்தி விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். மற்ற மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் (தமிழ்நாட்டினைத்/ புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைத் தவிர) அவரவர்கள் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் அவர்களுடைய வகுப்பினை குறிப்பிட்டு நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக் கட்டணத்தை செலுத்தாதிருந்தாலோ அல்லது வயது வரம்பு கடந்தவர்களாக இருந்தாலோ (01.07.2024ம் படி 32 வயது கடந்தவர்) அவர்களுடைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இது சம்மந்தமாக எந்த ஒரு கடிதப்போக்குவரத்தும் எந்தச் சூழ்நிலையிலும் விண்ணப்பதாரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அவர்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(iv) தமிழ்நாடு நீதித்துறை அமைச்சுப் பணியில் மற்றும் புதுச்சேரி நீதித்துறை அமைச்சுப்பணிகள், மத்திய அல்லது மாநில அரசுப் பணியிலுள்ள தகுதிகாண் பருவத்தினர்/ தகுதிகாண் பருவம் நிறைவடையாத/ விண்ணப்பதாரர்கள், இந்த அறிவிக்கைக்குப் பின் தேதியில் தங்களது அலுவலர் அல்லது துறைத்தலைவரிடமிருந்து, 'இவ்வறிக்கை' மற்றும் பொதுவான 'அறிவுரைகளில்' குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின்படி **(பின்னிணைப்பு-B)** தடையின்மைச் சான்றிதழை பெற்று, இணையதளம் மூலமாக விண்ணப்பிக்கும்போது அதனை பதிவேற்றம் செய்ய வேண்டும். அவ்வாறு சான்றிதழை பதிவேற்றம் செய்யத் தவறும் பட்சத்தில் அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். ஆனால், அவ்விண்ணப்பத்தாரர்கள் தங்களின் விண்ணப்பங்களை உரிய வழியாக சமர்ப்பிக்கத் தேவையில்லை. அவர்கள் தங்கள் விண்ணப்பங்களை இணையத்தளம் மூலம் சமாப்பிக்கவேண்டும்.

(v) ஆதரவற்ற விதவைகளுக்கு சிறப்பு வயது சலுகை எதுவும் கிடையாது.

***நேரடி ஆட்சேர்ப்புக்கு, 13.09.2021 தேதியிட்ட அரசாணை (நிலை) எண்.91, மனிதவள மேம்பாட்டுத் துறை(S) ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி, அதிகபட்ச வயது வரம்பு இரண்டு ஆண்டுகளுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.**

**B. தேவையான கல்வி தகுதி:**

அறிவிக்கை தேதியன்று, 10-ஆம் வகுப்பு அல்லது அதற்கு இணையான கல்விப் படிப்பு நிறைவு செய்திருக்கவேண்டும்.

இப்பணிக்கு இலகு ரக வாகனத்திற்கான ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.

**5. தேர்வுக் கட்டணம்:-**

| வ. எண் | வகையினம் | கட்டணம் |
|---|---|---|
| 1. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் /பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இசுலாமியர்)/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர்/ மற்றவர்கள். | ரூ. 500/- |
| 2. | தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த ஆதிதிராவிட வகுப்பினர், ஆதிதிராவிட வகுப்பினர் (அருந்ததியர்), பழங்குடியினர் மட்டும் | முழு விலக்களிக்கப்படுகிறது |
| 3. | மாற்றுத் திறனாளிகள் மற்றும் அனைத்து வகுப்பினைச் சேர்ந்த ஆதரவற்ற விதவைகள்<br>a) மாற்றுத்திறனாளிகள், 40 சதவிகிதத்திற்கு குறைவாக ஊனம் கொண்டிருக்கக்கூடாது. (அனுமதிக்கப்பட்ட ஊனங்கள்)<br>b) ஆதரவற்ற விதவைகள் பொறுத்தவரை, “ஆதரவற்ற விதவை சான்றிதழினை” வருவாய் கோட்டாட்சியர்/சார் ஆட்சியர்/ உதவி ஆட்சியரிடமிருந்து பெற்றிருக்க வேண்டும். "விதவை சான்றிதழ் ஆதரவற்ற விதவை சான்றிதழாக கருதப்படமாட்டாது" | முழு விலக்களிக்கப்படுகிறது |

**குறிப்பு**

1. மேற்கண்ட வயது, கட்டணச் சலுகை, இடஒதுக்கீடு மற்றும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மற்ற முன்னுரிமை உள்ளிட்ட வேறு சலுகைகளைக் கோரும் விண்ணப்பதாரர்கள் தகுதிவாய்ந்த அதிகாரிகளால் கொடுக்கப்பட்ட முறையான சான்றிதழ்களை அறிவிப்பு தேதியில் பெற்று இருத்தல் வேண்டும் மற்றும் கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரர்கள் யாரேனும் தவறான தகவலின் அடிப்படையில் விண்ணப்பித்து வயது தளர்வு/கட்டண சலுகை பெற்றிருப்பது தெரியவந்தால், அவர்களின் விண்ணப்பங்கள் தெரிவின் பொழுது எந்த நேரத்திலும் நிராகரிக்கப்படும்.

3. எந்த ஒரு சூழ்நிலையிலும், விண்ணப்பத்தாரர்கள் செலுத்திய கட்டணம் திருப்பித் தரப்படமாட்டாது.

4. விண்ணப்பதாரர்கள் தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்கக் கோரிய 72 மணி நேரத்திற்குள் பதிவேற்றம் செய்ய / அனுப்ப தவறினால், அவர்கள் அதைச் சமர்ப்பிப்பதற்கான கால நீட்டிப்புக்கு தகுதியுடையவர் அல்ல, மேலும் அத்தகைய ஆவணங்களின் அடிப்படையில், அவர்கள் உரிமை கோர இயலாது.

6. **<u>தெரிவு செய்யும் முறைகள்</u>**

(அ) எழுத்துத்தேர்வு, (ஆ) செய்முறைத் தேர்வு மற்றும் (இ) வாய்மொழி தேர்வின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**(அ) எழுத்துத்தேர்வு**

(மொத்த மதிப்பெண்கள் 125 - கால அளவு - 150 நிமிடங்கள்)

எழுத்துத்தேர்வு 125 கொள்குறிவகை (Objective type) கேள்விகளைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு கேள்வியும் ஒரு மதிப்பெண் கொண்டது.

எழுத்துத்தேர்வு, பகுதி-அ (Part – A) மற்றும் பகுதி-ஆ (Part – B) என இரண்டு பகுதிகளைக் கொண்டது.

| பாடம் | மொத்த வினாக்கள் | மொத்த மதிப்பெண்கள் | குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்கள் | கால அளவு |
|---|---|---|---|---|
| **<u>பகுதி அ</u>**<br>தமிழ் மொழி தகுதித் தேர்வு<br>*பார்வை 01.12.2021ஆம் தேதியிட்ட அரசாணை (நிலை) எண்.133 மனிதவள மேலாண்மை (எம்) துறை)<br>**<u>மாற்றுத்திறனாளிகளுக்கு மட்டும்:</u>**<br>‘பொது ஆங்கிலம்’ தேர்வு செய்யும் மாற்றுத்திறனாளிகளுக்கு மட்டும் பாடத்திட்டம் பொது ஆங்கிலத்தில் இருக்கும் | 50 | 50 | 20 | **150 நிமிடங்கள்** |
| **<u>பகுதி ஆ</u>**<br>பொது அறிவு | 75 | 75 | 30 | |

## பாடத்திட்டம் - எழுத்துத் தேர்வு

| | |
|---|---|
| பகுதி அ : (50 மதிபெண்கள்) | **பொதுத்தமிழ்** (பத்தாம் வகுப்பு வரை உள்ள தமிழ்நாடு அரசு பாடத்திட்டம்)<br>[**பொது ஆங்கிலம்** (பத்தாம் வகுப்பு வரை உள்ள தமிழ்நாடு அரசு பாடத்திட்டம்)**] (மாற்றுத்திறனாளிகளுக்கு, கேள்விகள் அவர்களின் விருப்பப்படி, தமிழ் அல்லது ஆங்கிலத்தில் அமைக்கப்படும்)<br>**பார்வை 23.05.2022ஆம் தேதியிட்ட அரசாணை (நிலை) எண் 49, மனிதவள மேலாண்மை (எம்) துறை. |
| பகுதி ஆ : (75 மதிபெண்கள்) | **பொது அறிவு மற்றும் விழிப்புணர்வு,** ஓட்டுநர் கோட்பாடு, வாகனத்தை இயக்குவதற்கு முன்பான சோதனை, பார்வை திறன், சில வாகனங்களுக்கு முன்னுரிமை, போக்குவரத்து கல்வி, வாகன இயக்கவியல் மற்றும் பழுதுபார்த்தல், ஓட்டுநருக்கான நற்பண்புகள், எண்கணிதம் மற்றும் காரணம் அறியும் திறன், ஓட்டுநர் திறமை மற்றும் நுட்பம், முதலுதவி, அவசர சிகிச்சை ஏனைய. |

**குறிப்பு**

- விண்ணப்பதாரர்கள் பகுதி அ மற்றும் பகுதி ஆ வில் தனித்தனியே தேர்ச்சி பெறவேண்டும்.
- பகுதி **'அ'** (Part – A)ல் உள்ள கேள்விகள் தமிழில் கேட்கப்படும். **மாற்றுத்திறனாளிகளுக்கு, கேள்விகள் அவர்களின் விருப்பப்படி, தமிழ் அல்லது ஆங்கிலத்தில் அமைக்கப்படும்.
- விண்ணப்பதாரர்கள் பகுதி **'அ'** (Part-A) இல் குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்களான 40% (அதாவது 20 மதிப்பெண்கள்) பெற்றிருந்தால் மட்டுமே பகுதி **'ஆ'** (Part – B) மதிப்பீடு செய்யப்படும்.
- பகுதி **'ஆ'** (Part – B)ல் உள்ள கேள்விகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) இருமொழிகளிலும் அமைக்கப்படும். தமிழ் மற்றும் ஆங்கில கேள்விகளில் முரண்பாடுகள் இருப்பின், ஆங்கில மொழியில் கேட்கப்படும் கேள்வியே சரியானதாக கருத வேண்டும்.
- பகுதி **'ஆ'** (Part-B) இல் பெறப்பட்ட மதிப்பெண்கள் அடிப்படையிலும், இடஒதுக்கீட்டு விதியின் அடிப்படையிலும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் செய்முறை தேர்வுக்கு தெரிவு செய்யப்படுவர்.
- செய்முறை தேர்வுக்கு அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை, காலி பணியிடங்களின் எண்ணிக்கையைப் போன்று 10 மடங்குக்கு மிகாமலோ

அல்லது உயர் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு வேறு எண்ணிக்கையிலோ, ஒதுக்கீட்டு விதியைப் பின்பற்றி நிர்ணயிக்கப்படும். ஆயினும், ஒவ்வொரு ஒதுக்கீட்டுப் பிரிவிலும், அந்தந்த பொதுப்பிரிவு உட்பட பிரிவுகளுக்குரிய வரம்புநிலை மதிப்பெண்களுக்கு (cut off marks) சமமான மதிப்பெண்களைப் பெறும் விண்ணப்பதாரர்கள் அனைவரும் செய்முறைத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். எழுத்துத் தேர்வில் பெறப்படும் தகுதிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் செய்முறை தேர்வில் கலந்துகொள்ள உரிமை கோரமுடியாது.

- எழுத்துத் தேர்வில் பெறப்படும் தகுதிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் செய்முறை தகுதிக்கானது மட்டுமே. அந்த மதிப்பெண்கள் தேர்வாளர்களின் இறுதிப்பட்டியல் தயாரிக்கும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.
- தேர்வு நடைபெறும் இடம், தேதி, தெரிவு செய்யும் முறை மற்றும் இவ்வறிவிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள விதிகளை தளர்த்தவோ அல்லது தேர்வு சம்மந்தப்பட்ட உத்தரவுகள் வழிகாட்டுதல்கள், மற்றும் குறைந்தபட்ச மதிப்பெண், அல்லது தகுதி அல்லது மறுமதிப்பீடு அல்லது மறுகூட்டலுக்கோ மாற்றுவதற்கான எவ்வித வேண்டுதலும் எந்தச் சூழ்நிலையிலும் ஏற்கப்படமாட்டாது.
- 23.05.2022ஆம் தேதியிட்ட அரசாணை (நிலை) எண்.49, மனிதவள மேலாண்மை (எம்) துறை ஆணையின்படி, ஆங்கில வழியில் பாடம் படித்த மாற்றுத்திறனாளிகளுக்கு மட்டுமே தமிழ் மொழித்தாள் எழுதுவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. அதற்குபதில், அவர்களுக்கென்று பொது ஆங்கிலத் தேர்வு பத்தாம் வகுப்புதரத்தில் நடத்தப்படும். 40 சதவீதத்திற்கும் குறைவான ஊனமுற்ற நபர்களுக்கும் இது பொருந்தும்.

**ஆ. <u>செய்முறை தேர்வு</u>**
**<u>(மொத்த மதிப்பெண்கள் - 100)</u>**
**<u>(தகுதிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் - 40)</u>**

செய்முறைத் தேர்வில் தேர்வர்களின் ஓட்டுநர் கோட்பாடு, வாகனத்தை இயக்குவதற்கு முன்பான சோதனை, பார்வைத் திறன், சில வாகனங்களுக்கு முன்னுரிமை, போக்குவரத்து கல்வி, வாகன இயக்கவியல் மற்றும் பழுதுபார்த்தல், ஓட்டுநருக்கான நற்பண்புகள், ஓட்டுநர் திறமை மற்றும் முதலுதவி, அவசர சிகிச்சை, பொதுவான நடத்தை மற்றும் அணுகுமுறை குறித்து பரிசோதிக்கப்படும்.

**இ) <u>வாய்மொழி தேர்வு</u>**

**<u>(மொத்த மதிப்பெண்கள் - 15)</u>**

**<u>(தகுதிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் - 5)</u>**

(i) வாய்மொழித் தேர்வுக்காக, ஒதுக்கீட்டு விதியைப் பின்பற்றி, காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் தகுதிப்பெற்ற விண்ணப்பதாரர்களைப் பொறுத்து 1:2 அல்லது 1:3 அல்லது மாண்புமிகு உயர் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும் எண்ணிக்கையின் விகிதப்படி, விண்ணப்பதாரர்களின் இறுதித்தெரிவுபட்டியலிடப்படும்.

(ii) நேர்முகத் தேர்வின் நோக்கமே, விண்ணப்பதாரரின் மனவிழிப்புநிலை, திறன்கள், மனப்பாங்கு, ஒழுக்கநெறி மற்றும் பண்பு நலன்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதாகும்.

**7. <u>தெரிவு பட்டியல் தயாரித்தல்</u>**

எழுத்துத் தேர்வு, செய்முறை தேர்வு மற்றும் வாய்மொழி தேர்வில் விண்ணப்பபத்தாரர்கள் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும் மற்றும் இடஒதுக்கீட்டு விதிமுறையை பின்பற்றியும் தேர்வானவர்களின் இறுதி பட்டியல் முடிவுசெய்யப்படும்.

**8. <u>பணி அமர்த்தப்படும் இடம்</u>**

தேர்வு செய்யப்படும் தேர்வர்கள் சென்னை உயர்நீதிமன்றத்திலோ, சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையிலோ அல்லது தமிழ்நாடு நீதித்துறை பயிற்சி மையம் சென்னையிலோ அல்லது தமிழ்நாடு நீதித்துறை மண்டல பயிற்சி மையங்கள் கோவை மற்றும் மதுரையிலோ பணியமர்த்தப்படுவர். மேலும், மேலே கூறப்படும் இடங்களுக்கிடையே நிர்வாகத் தேவைக்கேற்ப பணிமாற்றம் செய்யப்படுவர்.

**9. தேர்வு நடை பெறும் இடம்**

(அ) எழுத்துத் தேர்வு சென்னை மற்றும் /அல்லது, மெட்ராஸ் உயர்நீதிமன்றம் முடிவு எடுக்கும் வேறு இடத்திலோ நடைபெறும். ஒதுக்கப்படும் தேர்வு மையத்தை மாற்றக்கோரும் விண்ணப்பங்கள் எச்சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.

(ஆ) தகுதியான விண்ணப்பத்தாரர்களுக்கு மட்டுமே செய்முறை தேர்வு மற்றும் வாய்மொழி தேர்வு நடத்தப்படும்.

(இ)தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தாரர்களுக்கு செய்முறை தேர்வு மற்றும் வாய்மொழி தேர்வு சென்னையில் நடைபெறும். எழுத்துத் தேர்வு, செய்முறைத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வு நடைபெறும் தேதிகள் பற்றிய விவரம், சென்னை உயர்நீதிமன்ற' ஆட்சேர்ப்பு பிரிவு அலுவலக இணையதளமான https://www.mhc.tn.gov.in-ல் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்படும். தனிப்பட்ட முறையில், தபால் கூரியர் மூலமாக தெரியப்படுத்தப்படமாட்டாது. ஆகையால், விண்ணப்பதாரர்கள் சென்னை உயர்நீதிமன்ற ஆட்சேர்ப்பு பிரிவு அலுவலக இணையதளத்தில் உள்ள தகவல்களை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஈ) எழுத்துத் தேர்வு, செய்முறை தேர்வு, வாய்மொழி தேர்வில் பங்கேற்க வரும் விண்ணப்பத்தாரர்களுக்கு எவ்வித பயணப்படியோ / தினப்படியோ வழங்கப்படமாட்டாது.

**மெட்ராஸ் உயர் நீதிமன்றம்**
**நாள்:15/01/2024**

**M. JOTHIRAMAN**
**தலைமை பதிவாளர்.**